**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மயிலாடுதுறை.**

**அசல் வழக்கு எண். 78/2018**

தேதி : 04.06.2026

பெயர் : கீதா (DW–4)

தகப்பனார் பெயர் : மாடசாமி

**குறுக்கு விசாரணை:**

1. நான் தாவா கிழாய் கிராமத்தில் 3 வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். புல எண். 209/7 சி மற்றும் 210/1 அமைந்துள்ள இடம் நேரடியாக தெரியும் என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் தற்பொழுது என்ன உள்ளது என்றால் மாடி வீடு உள்ளது. புல எண். 209/7 சி –ல் குடிசை வீடு உள்ளது, புல எண். 210/1 ல் மாடிவீடு உள்ளது. எனது விசாரணையில் மேற்படி குடிசை வீட்டில் இருந்து கொண்டு மாடிவீடு கட்டியுள்ளனர் என்பது தெரிய வந்தது. 2023 ஆம் ஆண்டு நான் வேலைக்கு வந்த போது மேற்படி மாடி வீடு முக்கால்வாசி கட்டப்பட்டு மீதி வேலைப்பாடுகள் செய்து கொண்டிருந்தனர்.

2. மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு புல எண்களுக்கும் அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருவாய் ஆவணங்களில் இருந்து அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். அடங்கல் பதிவேட்டில் யார் அந்த இடத்தில் உள்ளனர் என்பதை மட்டும் தான் குறிப்பிட்டிருக்குமே தவிர மேற்படி நிலத்தின் உரிமையாளர் யார் என்பதை குறிப்பிட்டு இருக்காது என்றால் சரிதான். மேற்படி இரண்டு புல எண்களிலும் யார் தற்போது உள்ளனர் என்றால் வடிவேல் படையாட்சி மகன் ஞானபிரகாசம் உள்ளார். மேற்படி புல எண் சொத்து யாருக்கு சொந்தம் என்றால் ஞானபிரகாசம் என்பவருக்கு சொந்தமானது.

3. ஞானபிரகாசம் என்பவருக்கு தான் சொத்து சொந்தமானது என்பதற்கு கிரய ஆவணம் மற்றும் பட்டா ஏதாவது பார்த்து உள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், 1996 –ல் அரசாங்கம் ஞானபிரகாசத்திற்கு பட்டா வழங்கியுள்ளது, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி புல எண்களுக்கு அ பதிவேடு கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன்.

4. நான் கொண்டு வந்துள்ள அ பதிவேட்டில் புல எண். 209/7 என்பது அருள்மிகு பழமலைநாத சுவாமி கோவில் அர்த்தராம கட்டளை பெயரில் உள்ளது என்றால் சரிதான். புல எண். 209/7 என்பது ரயத்துவாரி புஞ்சை. ரயத்துவாரி புஞ்சை என்பது அரசுக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். புல எண். 209/7–ஆன அரசுக்கு சொந்தமில்லாத சொத்தை ஞானப்பிரகாசத்திற்கு பட்டா கொடுத்துள்ளதாக சொல்வது சரியா என்றால் புல எண். 209/7 சி தான் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. புல எண். 209/7சி பட்டா கொடுக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. அடங்கல் பதிவேட்டில் புல எண். 209/7சி–ல் காலம் 12–ல் அடித்து எழுதப்பட்டுள்ளது அதனை யார் அடித்தார்கள் என்ன உத்தரவின் பேரில் அடிக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தவறாக பெயர் எழுதி அடித்து சரியான பெயர் எழுதுவதற்கு கூட வாய்ப்புள்ளது. வருவாய் ஆவணங்களில் திருத்தம் செய்வதற்கு எங்களுக்கு அதிகாரம் கிடையாது என்றால் சரிதான், அதனை திருத்தம் செய்வதற்கு கோட்டாட்சியருக்கு தான் அதிகாரம் உள்ளது.

6. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் அடித்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது அதற்கு கோட்டாட்சியர் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. பிரதிவாதி ஞானபிரகாசத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் நீதிமன்றத்தில் தவறான தகவல்களை சொல்கிறேன் என்றால் சரியல்ல. புல எண். 210/1 என்பது புல எண் 209/7 சி– க்கு நேர் பின்பக்கம் என்றால் சரிதான். புல எண். 210/1 –ற்கு போக வேண்டும் என்றால் புல எண். 209/7 சி வழியாக தான் போக வேண்டும் என்றால் சரிதான். புல எண். 210/1 – என்பது நத்தம் சாரியா என்றால் சரிதான், நத்தம் சாரியில் யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு தான் அந்த இடம் சொந்தம் என்றால் சரிதான். சா.சா.ஆ.1 என்பது புல எண். 210/1 – நத்தம் சாரி என்றால் சரிதான்.

7. நத்தம் சாரி அடங்கலில் ரயத்துவாரி நிலம் என்று எழுத முடியுமா என்றால் எழுத முடியாது, அப்படி எழுதியிருப்பது தவறு என்றால் தவறுதான். மேற்படி புல எண்களுக்கு பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் கணினி சிட்டாவில் பழமலைநாத சுவாமி கோவிலுக்கு பட்டா எண். 12 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. மேற்படி பட்டா எண். 12 வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஞானப்பிரகாசத்திற்கு பட்டா கொடுத்ததாக நான் சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்திற்கு கொண்டு வரவில்லை என்றால் சரிதான்.

8. புல எண். 209/7 என்பது ரயத்துவாரி பட்டா நிலம், அதற்கு கிரய ஆவணத்தின் அடிப்படையில் தான் பட்டா மாற்றம் செய்ய முடியும் என்றால் சரிதான். புல எண். 209/7 சி எந்த ஆவணத்தில் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதற்கான விபரம் அதில் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பொதுத் தகவல் அலுவலரால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பற்றியும், புல எண். 209/7 தொடர்பான பட்டா மாற்றம் மண்டல துணை வட்டாட்சியர்–1, மயிலாடுதுறை அவர்களால் வழங்கப்பட்ட மேலெழுத்து பற்றி எனக்குத் தெரியாது.

<u>மறுவிசாரணை:</u> இல்லை.

P SIVA RANJANI
Digitally signed by P SIVA RANJANI
Date: 2026.06.04 17:28:47 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
மயிலாடுதுறை.